The Hindu (English)

Dated: 08.03.2024

# 'Political parties got 60% of funds from unknown sources'

The Hindu Bureau
NEW DELHI

Almost 60% of the funds received by political parties cannot be traced and come from "unknown" sources, including electoral bonds, according to a report by the Association for Democratic Reforms (ADR).

The ADR, which analysed the audit reports and the donations declared in statements filed by political parties with the Election Commission of India each year, said that between the financial years 2004-05 and 2022-23, the country's six national parties collected ₹19,083.08 crore from unknown sources.

At present, political parties are not required to reveal the names of individuals or organisations giving them less than ₹20,000. As a result, three-fifths of the funds received cannot be traced and are from 'unknown' sources, the report said.

Of the ₹3,076.88 crore declared as income by national parties in 2022-23, ₹1,832.87 crore – or more than 59% –came from unknown sources. Of this, the share of income from electoral bonds was ₹1,510.61 crore, or 82.42%.



The vast majority of these funds went to the BJP.

The vast majority of these funds went to the BJP. During 2022-23, the ruling party declared ₹1,400.23 crore as its income from unknown sources. This amounts to 76.39% of the total income from unknown sources declared by all national parties; the other five national parties together have received only ₹432.63 crore from unknown sources.

The Congress came a distant second, claiming 17.19% of the national pie and declaring ₹315.11 crore as its income from unknown sources.

The other parties included in the ADR's analysis were the Communist Party of India (Marxist), the Bahujan Samaj Party (BSP), the Aam Aadmi Party, and the National People's Party.

The Hindu (English)

Dated: 08.03.2024

# Congress questions 'hide and seek' over electoral bonds data

Party criticises SBI for seeking more time from the SC to furnish details of bonds; it says PM is terrified of 'revealing his corporate donors to people'

**The Hindu Bureau**
NEW DELHI

Hitting out at the State Bank of India (SBI) for seeking more time from the Supreme Court to disclose details on electoral bonds, the Congress on Thursday asserted that the bank's arguments were flawed, and alleged that Prime Minister Narendra Modi was "absolutely terrified of revealing his corporate donors to people".



**Hitting hard:** Former Union Minister Jairam Ramesh says the SBI's request for time until June 30 was 'conveniently timed'. FILE PHOTO

Asked to furnish data on the electoral bond scheme by March 6 by the Supreme Court, the SBI had approached the top court for time until June 30 to make the data available. "Hide and seek in New India: Nation seeks, Modi hides!," Congress general secretary (communications) Jairam Ramesh said in statement posted on social media platform X.

The former Union Minister said the SBI's request for extension was "conveniently timed for after the upcoming Lok Sabha elections". "The SBI's excuse was that its data on sale and encashment of electoral bonds is decoupled to maintain anonymity. According to the SBI, it would take months to match the buyers of the 22,217 electoral bonds issued since 2019 with the beneficiary parties. However, we know that each electoral bond was sold with two conditions - 1. Detailed Know Your Customer (KYC) exercise by the SBI branches to identify the buyer 2. Hidden serial numbers on the bonds," the Congress leader said.

In 2018, the Congress leader claimed, the SBI was able to identify the number and date of purchase of expired bonds when a political party tried to encash these expired bonds.

"The man who famously said *na khaunga, na khaane dunga* [won't be corrupt nor allow corruption] is now insisting on *na bataunga, na dikhaunga* [won't tell, won't show]," Mr. Ramesh alleged.

DtNext, Dated: 08.03.2024

# EC norm behind MDMK's stand on symbol

*Vaiko's firmness appears to be an attempt to save party's recognition, tax sops*

CHENNAI: **The MDMK has a valid reason for refusing to contest on DMK symbol or insisting that it would only contest on its 'own' symbol this time.**

MDMK general secretary Vaiko's stubbornness on the symbol issue seems motivated by the Election Commission of India (ECI) norms, which stipulate that a party must contest on its own symbol within six years.

The MDMK, which contested on DMK's Rising Sun symbol in the 2021 Assembly polls and 2019 Parliamentary polls, must contest on its 'own' symbol within a year to retain its recognition.

The party would miss its opportunity to contest on its own symbol within the stipulated six-year period if it obliged the DMK and contested on the latter's Rising Sun symbol again.

**If it obliges the DMK, MDMK will miss the chance to contest on its own symbol within the stipulated six-year period**

"This is the reason Vaiko has been adamant on the symbol issue. The MDMK negotiation team communicated its concern to the DMK seat sharing team, which was concerned about the victory quotient of the MDMK candidate. Our (DMK) leaders are worried about the MDMK securing the 'top' symbol from the ECI. There is no guarantee that it would get the same symbol. Even if it did, our Rising Sun is relatively very popular and it is easy to get our cadre to work effectively for it," said a DMK senior, admitting that their high command has almost agreed to MDMK's idea of allowing it to contest on its own symbol.

The DMK senior also conceded that the MDMK would forfeit its rights to claim tax concessions for donations received by the party if it loses its recognition. It is another reason for the MDMK insisting on contesting its own symbol.

The Hindu (English)

Dated: 08-03-2024

# Consider MDMK's plea to allot 'top' symbol: HC

**The Hindu Bureau**
CHENNAI

The Madras High Court on Thursday directed Election Commission of India (EC) to consider within two weeks a plea by MDMK to allot the 'top' symbol to it for this year's Lok Sabha election, and the 2026 Tamil Nadu Assembly election.

First Division Bench of Chief Justice Sanjay V. Gangapurwala and Justice D. Bharatha Chakravarthy issued the direction while disposing of a writ petition filed by the party. They made it clear that the petitioner's request must be considered in accordance with the relevant rules.

The orders were passed after senior counsel M. Ajmal Khan said the party was derecognised on the basis of an erroneous calculation of the percentage of votes secured in the 2006 Assembly election.

In an affidavit, the party's general secretary Vaiko said that the party began contesting in elections since 1996. Since then, it was allotted the 'top' symbol to contest in four Assembly and general elections each. In 2010, the EC derecognised the party on the ground that it had secured only 5.98% of valid votes in the 2006 election though it had actually secured 5.99% which must be construed as 6% of the valid votes, he said.

Dt. Next

Dated: 08-03-2024

# Play active role to ensure fair polls, CEO urges public

**CHENNAI: Chief Electoral Officer of Tamil Nadu Satyabrata Sahoo on Thursday said they geared up for general elections with more than an adequate number of electronic voting machines (EVMs), control units, and voter-verifiable paper audit trail (VVPATs).**

They have also taken measures to ensure fair and free elections, besides encouraging the electorates to be the eyes and ears of the commission to thwart political parties from indulging in corrupt practices.

"We are ready with 1.7 lakh EVMs, 99,000 Control Units, and 97,000 VVPATs for the general elections. An adequate number of machines are available in all the districts and we also have a reserve of 20% extra machines," Sahoo said. The commission has taken measures to encourage the public to aid them in preventing political parties and candidates from distributing cash and gifts in a bid to bribe the voters, he said and elaborated on ECI's app cVigil launched in 2018. The public with smartphones can download the mobile application from the Play Store. They can upload pictures and videos of malpractices during election campaigns with specific details such as location address and landmark. Action would be taken within 100 minutes from the time of uploading the complaint from the App.

"We will protect the identity of the complaints and also reply to the complainant regarding the action taken based on their complaint," he said.

**ECI has taken measures to encourage the public to help it in preventing political parties and candidates from bribing voters**

He further said that the electorates can apply for a change of address. It can be accepted till 10 days before the candidates file nomination papers.

The Times Of India

Dated: 08.03.2024


# Women surpass men by 15% in EC's drive to enrol new voters

Nisha.Nambiar@timesgroup.com

**Pune**: Women have surpassed men in enrolment of new voters during an ongoing drive, which is being conducted across the country by EC since Jan last year.

Figures from an EC report released this week showed that in the 13-month period till Jan this year, new women voters exceeded men by 15%. Of the 2.6 crore new voters enrolled during this period, 1.4 crore were women and men stood at 1.2crore.

Senior EC officials said more women voters exemplify a concerted effort towards gender parity and inclusivity within the electoral framework. As on Jan 31, India has 96.8 crore electors with women comprising 47.1 crore. The




gender ratio increased from 940 in 2023 to 948 in 2024.

Maharashtra is among the states that added more women voters than male voters. There were 3 lakh female electors against 1 lakh male voters which were added to the electoral rolls, taking the total in the state to 9.1 crore voters.

Shrikant Deshpande, former chief electoral officer of Maharashtra who had conducted the door-to-door drive, said that self-help groups, anganwadi workers and housing societies contributed in the significant increase in women electors' registration this year. "The male-female ratio in the electoral roll has increased from 917 to 922," he told **TOI**.

Swati Dyahadroy, assistant professor of women and gender studies at Savitribai Phule Pune University, said more women voters are important for electorate for adequate representation and reflect an improved gender ratio.

DT Next
Dated: 08.03.2024

# Electoral bonds issue: Congress protests against SBI in Tiruchy

**TIRUCHY: Members from Congress staged a protest against the State Bank of India (SBI) in Tiruchy on Thursday as a part of a nationwide protest against the bank for failing to provide details about electoral bonds to the Election Commission of India.**



Congress members stage protest against State Bank of India in Tiruchy on Thursday

The members led by the District Secretary Saarvanan who gathered in front of the SBI at Chinthamani in Tiruchy raised slogans against the bank and demanded to release of the details of the donors who provided money to the BJP through the electoral bonds.

They charged that the Union government has been misusing the bank for its gain and asked why the bank was not ready to provide the details despite the ECI's demands and failing to oblige to the apex court's verdict.

They also asked who was behind the delay. They said that the details could be retrieved by a click of a button but, the bank still refuses to give the details just to appease the BJP.

DT Next, Dated: 08.03.2024

# Poll bonds: NGOs seek contempt action on SBI

**NEW DELHI: A petition has been filed in the Supreme Court seeking contempt action against the State Bank of India (SBI) alleging it "wilfully and deliberately" disobeyed the apex court's direction to submit details of contributions made to political parties through electoral bonds to the Election Commission by March 6.**

The plea, filed by two NGOs, claimed SBI's application seeking extension of time till June 30 to disclose the details of electoral bonds encashed by political parties has been deliberately filed at the last moment to ensure that details of donors and the amount of donations are not disclosed to the public before the upcoming Lok Sabha elections.

A bench headed by Chief Justice DY Chandrachud on Thursday took note of the submissions by advocate Prashant Bhushan, who appeared on behalf of NGOs Association for Democratic Reforms and Common Cause, that he wanted initiation of contempt proceedings against the SBI.

**The bank wilfully and deliberately disobeyed the apex court's direction to submit details on electoral bond payments, they said**

Bhushan said the SBI plea is likely to be listed on March 11 and the contempt application should also be heard together with it.

"Please send an e-mail. I will pass the order," the CJI said.

The SBI moved the top court on March 4 seeking extension of time till June 30 to disclose the details of the electoral bonds that were encashed.

The Hindu (Tamil)

Dated: 08.03.2024

# ஒப்புகை சீட்டு எண்ணிய பிறகே தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும்

## தேர்தல் அதிகாரியிடம் திருமாவளவன் மனு



அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் விவிபேட் கருவியை இணைத்து, ஒப்புகைச் சீட்டை முழுமையாக எண்ணிய பிறகே மக்களவைத் தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும் என விசிக தலைவர் திருமாவளவன் வலியுறுத்தியுள்ளார்.

சென்னை, தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவை நேற்று சந்தித்த விசிக தலைவர் திருமாவளவன், கோரிக்கைகள் அடங்கிய மனுவை அளித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: டெல்லியில் இருந்து தலைமைத் தேர்தல் ஆணையர் சென்னை வந்தபோது அவரிடம் சமர்ப்பிப்பதற்காக விசிக சார்பில் கோரிக்கை மனுவை தயாரித்திருந்தோம். அப்போது அவரை சந்திக்க இயலவில்லை. அந்த கோரிக்கை மனுவை தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி சத்யபிரத சாஹூவை சந்தித்து அளித்துள்ளோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்ய வாய்ப்பிருப்பதாக கட்சி சார்பற்ற அமைப்புகளால் அச்ச உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது. இன்றும் வடஇந்திய மாநிலங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

எனவே, அனைத்து வாக்குப்பதிவு இயந்திரங்களுடன் விவிபேட் எனினும் ஒப்புகைச் சீட்டு கருவிகளையும் இணைக்க வேண்டும். அந்த சீட்டுகளை முழுமையாக எண்ணி தேர்தல் முடிவை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளோம். விசிக சார்பில் கடந்த 2 மாதங்களில் 2 முறை மாநிலம் தழுவிய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறோம். அதன் தொடர்ச்சியாக கோரிக்கையை வலியுறுத்தும் மனுவை வழங்கியுள்ளோம். தேர்தல் ஆணையர்களை தேர்வு செய்வதற்கான குழுவில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி இடம்பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளையும் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Thiru Tirumavalavan gives petition to CEO, Tamil Nadu seeking that the Election result should be announced only after counting the VVPAT slips.

The Hindu (Tamil)

Dated: 08.03.2024

# தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியும் இடம் மாறாத அதிகாரிகள்

● செங்கல்பட்டு

மக்களவை தேர்தல் பணிகளைத் தொடங்கும் விதமாக, ஒரே இடத்தில் 3 ஆண்டுகள் பணியாற்றிய அதிகாரிகளை இடமாற்றம் செய்ய வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. ஒரே தொகுதியில் பணியாற்றுபவர்களையும் இடமாற்றம் செய்ய உத்தரவிட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள், துணைத் தேர்தல் அதிகாரிகள், கூடுதல் ஆட்சியர்கள், துணை ஆட்சியர்கள், உதவிக் கோட்ட அதிகாரிகள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி, பேரூராட்சி துறை அதிகாரிகள், ஊழியர்கள் ஆகியோருக்கு இந்த உத்தரவு பொருந்தும்.

இதனைத் தொடர்ந்து செங்கை, காஞ்சி, திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள வருவாய்த் துறை, காவல் துறை உள்ளாட்சி, நகராட்சி, மாநகராட்சி உள்ளிட்ட துறைகளில் நீண்ட நாட்களாக பணியாற்றிய அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். ஆனால் பேரூராட்சி துறைகளில் பல ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றும் அதிகாரிகள் மாற்றம் செய்யப்படாமல் உள்ளனர்.

குறிப்பாக தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியும் இந்த மாவட்டங்களில் பேரூராட்சி துறையில் உள்ள பல்வேறு அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்படாமல் இருப்பதாக புகார் அளிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

Though the ECI has reiterated the transfer of officials whose service is more than 3 years in same place, some of the officials are not yet transferred in districts.

Daily Thanthi

Dated: 08-03-2024

நாடாளுமன்ற தேர்தலில்

# ஓட்டுக்கு யாரும் பணம் கொடுத்தால் வீடியோ எடுத்து தேர்தல் கமிஷனுக்கு அனுப்பலாம்

## தலைமை தேர்தல் அதிகாரி பேட்டி

சென்னை, மார்ச்.8-

நாடாளுமன்ற தேர்தலில் ஓட்டுக்கு பணம், பரிசு பொருள் கொடுப்பதை தடுக்க 'சி-விஜில்' என்ற செல்போன் செயலியை தேர்தல் கமிஷன் உருவாக்கியுள்ளது. தேர்தல் முறைகேடுகள் குறித்து வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து பொதுமக்கள் அந்த செயலி மூலம் அனுப்பலாம் என்று தலைமை தேர்தல் அதிகாரி சத்யபிரத சாகு தெரிவித்துள்ளார்.

### வாக்குச்சாவடிகள்

இதுகுறித்து சென்னை தலைமைச்செயலகத்தில் பத்திரிகையாளர்களுக்கு சத்யபிரத சாகு அளித்த பேட்டி வருமாறு:-

தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலுக்காக 68 ஆயிரத்து 154 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட உள்ளன. அதிகபட்சமாக 1,500 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி என்ற விகிதத்தில் அமைக்கப்படும். சில இடங்களில் மட்டும் 800 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படும்.

வாக்குப்பதிவின்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை வித்தியாசப்படுவதாக சில அரசியல் கட்சிகள் புகார் கூறுகின்றனர். அதற்காகத்தான் ஒவ்வொரு சட்டசபை தொகுதியிலும் 5 விவிபேட் எந்திரங்களில் பதிவான ஒப்புகைச் சீட்டுகளை எண்ணிப் பார்ப்போம். அந்த விவிபேட் எந்திரத்திற்கான மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் உள்ள எண்ணிக்கையும் விவிபேடில் உள்ள எண்ணிக்கையும் சரியாக இருக்கிறதா? என்பதையும் சரிபார்ப்போம். சரியாக இருப்பதை அங்கிருக்கும் அரசியல் கட்சிகள் முன்னிலையில் உறுதிப்படுத்திக்கொள்வோம்.

### எத்தனை எந்திரங்கள்?

நாடாளுமன்றத் தேர்தல் பணிகள் முழுமையாக முடிவடைந்துவிட்டன. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுவிட்டாலும் கூட வேட்பு மனுதாக்கலுக்கு 10 நாட்களுக்கு முன்புவரை, முகவரி மாறுதலுக்கு விண்ணப்பிக்கலாம். அந்த மாறுதலை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும். ஆன்லைன் மூலமாகவும் விண்ணப்பிக்கலாம்.

அனைத்து மாவட்டங்களுக்கும் தேவையான மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் கைவசம் உள்ளன. கூடுதலாக 20 சதவீதம் அளவுக்கு எந்திரங்கள் உள்ளன. தேர்தல் பணிக்கான அலுவலர்கள், அதிகாரிகளையும் தயார்ப்படுத்தி வருகிறோம். வாக்குப்பதிவு செய்யும் 'பேலட் யுனிட்' 1 லட்சத்து 70 ஆயிரம், கண்ட்ரோல் யுனிட் என்ற கட்டுப்பாட்டு எந்திரங்கள் 93 ஆயிரம், விவிபேட் 99 ஆயிரம் உள்ளன. அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் தொகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் 2 எந்திரங்கள் வைக்கப்படும்.

### ஓட்டுக்கு பணம் கொடுத்தால்...

வீடு வீடாகச் சென்று ஓட்டுக்கு பணம், பரிசு கொடுப்பதை தடுக்க தேர்தல் கமிஷன் 2 வழிமுறைகளை வகுத்துள்ளது. ஒன்று, சி-விஜில் என்ற செல்போன் செயலி. அதில் தேர்தல் முறைகேடுகள் குறித்தும் வாக்காளர்களுக்கு பரிசு பொருள், பணம் கொடுப்பது பற்றியும்செல்போனில்வீடியோ அல்லது புகைப்படம் எடுத்து அந்த செயலி மூலம் அனுப்பலாம். புகார் அளிப்பவர் குறித்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும். அதை ஆதாரமாக வைத்து தேர்தல் கமிஷன் உரிய நடவடிக்கைகளை எடுக்கும்.

பழைய வீடியோவை அனுப்பினால் உடனே தெரிந்துவிடும். அடுத்ததாக, இ.எஸ்.எம்.எஸ். மூலமாகவும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதில் வரும் புகார்கள், அனைத்து அதிகாரிகளும் காணும் வகையில் இருக்கும். இது, வருமானவரித்துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட அனைத்து மாவட்ட அளவிலான அதிகாரிகளை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பெரிய அளவிலான பணப்பரிமாற்றங்களை, சம்பந்தப்பட்ட வங்கிகள் மூலம் உடனடியாக அறிய முடியும். இந்த தொழில்நுட்பம் மூலம் பொதுமக்கள் எங்களுக்கு உதவலாம்.

இவ்வாறு அவர் கூறினார்

The CEO, Tamil Nadu informed that if anyone distribute money for vote, complaint may be sent to ECI.

Daily Thanthi

Dated: 08.03.2024

### தேர்தல் பத்திர விவரங்களை அளிக்க கால நீட்டிப்பு கேட்கும்

# பாரத ஸ்டேட் வங்கி மீது அவமதிப்பு நடவடிக்கை கோரி வழக்கு

## சுப்ரீம் கோர்ட்டில் 11-ந் தேதி விசாரணை

புதுடெல்லி, மார்ச்.8-
தேர்தல் பத்திரம் மூலம் பெறப்பட்ட நன்கொடை விவரங்களை சமர்ப்பிக்க கூடுதல் கால அவகாசம் கேட்கும் பாரத ஸ்டேட் வங்கி மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

### கால நீட்டிப்பு கேட்கும் வங்கி

அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்க கொண்டு வரப்பட்ட தேர்தல் பத்திர திட்டத்தை சுப்ரீம் கோர்ட்டு கடந்த மாதம் 15-ந் தேதி ரத்து செய்தது.

இதுவரை தேர்தல் பத்திரங்களை வாங்கியவர்கள், அவற்றின் மூலம் நன்கொடை பெற்ற கட்சிகள், நன்கொடை தொகை ஆகிய விவரங்களை மார்ச் 6-ந் தேதிக்குள் தேர்தல் கமிஷனிடம் சமர்ப்பிக்குமாறு பாரத ஸ்டேட் வங்கியை சுப்ரீம் கோர்ட்டு கேட்டுக்கொண்டது.

இதற்கிடையே, இந்த கால அவகாசத்தை ஜூன் 30-ந் தேதிவரை நீட்டிக்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் பாரத ஸ்டேட் வங்கி மனுதாக்கல் செய்துள்ளது. அம்மனு, 11-ந் தேதி விசாரணைக்குவருகிறது.

### தொண்டு நிறுவனங்கள் மனு

இந்நிலையில், பாரத ஸ்டேட் வங்கி மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி, ஜனநாயக சீர்திருத்த சங்கம், காமன் காஸ் ஆகிய தொண்டு நிறுவனங்கள் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்துள்ளன.

அந்த மனுக்களில், 'கால அவகாசம் முடிவதற்கு 2 நாட்களே இருக்கும்போது பாரத ஸ்டேட் வங்கி ஜூன் 30-ந் தேதிவரை கால அவகாசம் கோரி மனு தாக்கல் செய்துள்ளது. அதன் மனு தீயநோக்கம் கொண்டது.

வேண்டுமென்றே சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுக்கு கீழ்ப்படியாமலும், மீறும்வகையிலும் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. கோர்ட்டு அதிகாரத்தை குறைத்து மதிப்பிட தெளிவான முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஸ்டேட் வங்கி மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

### தலைமை நீதிபதி அறிவுறுத்தல்

இந்த மனுக்கள், தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு முன்பு விசாரணைக்குவந்தன.


அப்போது தலைமை நீதிபதி, "ஒரு இ மெயில் அனுப்புங்கள். 11-ந் தேதி விசாரணைக்கு பட்டியலிட உத்தரவு பிறப்பிக்கிறேன்" என்று கூறினார். எனவே, இம்மனுக்கள் 11-ந் தேதி விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4

Some of the organisations filed complaint petition against SBI seeking more time for submitting Election bond details. The Supreme court will hear the case on ~~11th Mar, 202~~ 11th march. 2024.

Daily Thanthi

Dated: 08.03.2024



பம்பரம் சின்னம் கேட்டு வைகோ மனு:

## தேர்தல் ஆணையம் பரிசீலிக்க ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, மார்ச்.8–

சென்னை ஐகோர்ட்டில், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தாக்கல் செய்துள்ள மனுவில், "1996–ம் ஆண்டுமுதல் பொதுத்தேர்தல்களில் எங்கள் கட்சி போட்டியிட்டு வருகிறது. 2014–ம் ஆண்டு நடந்த நாடாளு மன்றத் தேர்தலில் பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது. அதேபோல, வருகிற நாடாளுமன்றத் தேர்தலிலும் பம்பரம் சின்னம் ஒதுக்கவேண்டும் என்று இந்திய தேர்தல் ஆணையத்துக்கு கடந்த டிசம்பர் மாதம் மனு கொடுத்தும் பரிசீலிக்கப்படவில்லை. எனவே, அந்த மனுவை பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்" என்று கூறியிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா, நீதிபதி டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, வைகோ தரப்பில் வக்கீல்கள் கே.முரளி, தென்காசி எல்.சங்கரன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர். தேர்தல் ஆணையம் தரப்பில், வைகோ தரப்பில் புதிய விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த விண்ணப்பம் முறையாக பரிசீலிக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது. இதை பதிவு செய்துக்கொண்ட நீதிபதிகள், வைகோவின் மனுவை பரிசீலித்து 2 வாரங்களில் தகுந்த முடிவு எடுக்கவேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டனர்.

Dinamalar

Dated: 08.03.2024

## பம்பரம் கேட்டு ம.தி.மு.க., மனு ஆணையத்திற்கு உத்தரவு

சென்னை, மார்ச் 8–

சென்னை உயர் நீதிமன்றத்தில், ம.தி.மு.க., பொதுச் செயலர் வைகோ தாக்கல் செய்த மனுவில், '1996 முதல் பம்பரம் சின்னத்தில், ம.தி.மு.க., போட்டியிட்டு வருகிறது.

'கடந்த 2006ல் நடந்த சட்டசபை தேர்தலில், 6 சதவீதத்திற்கு குறைவான ஓட்டுகள் பெற்றதாக, அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது. 2014 தேர்தலில் பம்பரம் சின்னம் ஒதுக்கப்பட்டது.

'வரும் லோக்சபா தேர்தலில், பம்பரம் சின்னம் ஒதுக்கக் கோரி, தேர்தல் ஆணையத்தில் விண்ணப்பித்த மனுவை பரிசீலிக்க உத்தரவிட வேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

மனு, தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா, நீதிபதி பரத சக்ரவர்த்தி அடங்கிய முதல் பெஞ்ச் முன், விசாரணைக்கு வந்தது.

தேர்தல் ஆணையம் சார்பில் வழக்கறிஞர் நிரஞ்சன் ஆஜராகி, "விண்ணப்பம் முறையாக பரிசீலிக்கப்படும்," என்றார்.

இதையடுத்து, விண்ணப்பத்தின் மீது இரண்டு வாரங்களில் முடிவெடுக்க, தேர்தல் ஆணையத்துக்கு முதல் பெஞ்ச் உத்தரவிட்டது.

5 High Court ordered Election Commission for considering the petition of Vaiko seeking 'TOP' symbol for their party.

Dinamalar

Dated: 08.03.2024

# 'அடையாளம் தெரியாத வருவாயில் 82 சதவீதம் தேர்தல் பத்திரங்களே'

புதுடில்லி, மார்ச் 8– தேசிய கட்சிகளுக்கு அடையாளம் தெரியாத வகையில் கிடைத்த வருவாயில், 82 சதவீதம், தேர்தல் பத்திரங்கள் வாயிலாக கிடைத்தவை என்பது ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.

அரசியல் கட்சிகளுக்கு, 20,000 ரூபாய்க்கு கீழ் நன்கொடை அளிப்பவர்கள் பெயர்களை வெளியிட வேண்டிய அவசியமில்லை.

**உத்தரவு**

இதன் ஒரு பகுதியாக அறிமுகம் செய்யப்பட்டது தான், தேர்தல் பத்திரங்கள்.

இந்த தேர்தல் பத்திரங்கள் முறை செல்லாது என, உச்ச நீதிமன்றம் சமீபத்தில் உத்தரவிட்டது.

இந்நிலையில், 2022 – 2023ம் ஆண்டுக்கான கணக்கு தணிக்கை அறிக்கைகளை, ஆறு தேசிய கட்சிகள், தேர்தல் கமிஷனில் சமர்ப்பித்துள்ளன. இதில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், ஏ.டி.ஆர்., எனப்படும் ஜனநாயக சீர்த்திருத்தத்துக்கான சங்கம் என்ற அரசுசாரா அமைப்பு ஆய்வு மேற்கொண்டது.

அது வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

பா.ஜ., காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், பகுஜன் சமாஜ், ஆம் ஆத்மி, தேசிய மக்கள் கட்சி ஆகிய ஆறு தேசிய கட்சிகள் அளித்துள்ள தகவல்களின்படி, ஒட்டு மொத்தமாக இவற்றுக்கு, 1,832 கோடி ரூபாய், அடையாளம் தெரியாத வகையில் கிடைத்த வருவாயாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், 1,510 கோடி ரூபாய், அதாவது மொத்த அடையாளம் தெரியாத வருவாயில், 82 சதவீதம், தேர்தல் பத்திரங்கள் வாயிலாகவே கிடைத்துள்ளன.

இதில் பா.ஜ., அதிகபட்சமாக, 1,400 கோடி ரூபாயை, அடையாளம் தெரியாத வகையில் கிடைத்த வருவாயாக காட்டியுள்ளது.

**அடையாளம்**

இது ஒட்டுமொத்த தொகையில், 76.39 சதவீதம். அதற்கடுத்து, காங்கிரஸ், 315.11 கோடி ரூபாயை கணக்கு காட்டி உள்ளது. இது, 17.19 சதவீதமாகும்.

தேசிய கட்சிகளுக்கு, 2004 – 2005 முதல் 2022 – 2023 வரையிலான கால கட்டத்தில், 19,083 கோடி ரூபாய் அடையாளம் தெரியாத வகையிலான வருவாய் கிடைத்து உள்ளது.

இந்த தேசிய கட்சிகளைத் தவிர, பல மாநில கட்சிகளுக்கும், அடையாளம் தெரியாத வகையில் வருவாய் கிடைத்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

6 Among the ~~Political~~ total income of political parties 82% is from Election bond.